7வது மண்டல மாநாட்டில் ஒன்றரை லட்சம் பெற்றோரைச் சந்தித்தார் முதலமைச்சர்!

ஆண்டுக்கு ஆண்டு கல்வித் துறைக்கு நிதியை அதிகரித்து வழங்குவதால்

தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

சட்டப்பேரவையில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஏப்.27-

சட்டப்பேரவையில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கியதால் பள்ளிக் கல்வித் துறை இன்றைக்கு மேன்மையடைந்து அரசு பள்ளிகளில் மாணவர்கள் அதிக அளவில் சேர்ந்து படித்து வருகிறார்கள் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலுரை வருமாறு :-

பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய விவாதத்தின் தொடர்ச்சியாக தற்போது எனது பதிலுரை. நேற்றைய விவாதத்தில் முன்னாள் அமைச்சர்களான மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணன் செங்கோட்டையன் அவர்களும், அண்ணன். கே.பி. அன்பழகன் அவர்களும், சட்டமன்றக் கட்சியின் தலைவர்களாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணன் ஜி.கே. மணி அவர்களும், அண்ணன் வேல்முருகன் அவர்களும், அண்ணன் ட்டி. இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாக சகோதரர் வெற்றிஅழகன் அவர்களும், அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களும், அறந்தாங்கி தி. ராமச்சந்திரன் அவர்களும், அண்ணன் பாபு அவர்களும், அண்ணன் கோ. ஐயப்பன் அவர்களும், அண்ணன் மா. சின்னதுரை அவர்களும் உரையாற்றினார்கள். அவர்களுடைய பல்வேறு விதமான வினாக்களுக்கு என்னுடைய விடைகளை அளித்து முறையாக என்னுடைய பதிலுரையை நான் தொடங்கவிருக்கிறேன். அவர்கள், குறிப்பாக சமூக நலத் துறை சார்ந்த சில கோரிக்கைகளையும், பழங்குடியினர் நலத் துறையோடு அமர்ந்து பேசி முடிவெடுக்க வேண்டிய சில கோரிக்கைகளையும் வைத்தார்கள். மேலும், மொழிவாரி சிறுபான்மை பள்ளிகளில் தமிழாசிரியர்களை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்தார்கள். TRB மூலமாக தற்போது தேர்வு செய்துவிட்டோம். அதுகுறித்த வழக்கு முடிவிற்கு வந்துவிட்டால், கண்டிப்பாக dedicated ஆக தமிழாசிரியர்கள் அங்கே நியமிக்கப்படுவார்கள்.

66 இலட்சம் மாணவர்கள் – 63 இலட்சம் மாணவியர்கள்

என்று பாலின சமத்துவம் கொண்டு வந்துள்ளோம்!

சாதி பெயரைப் பற்றியும் இங்கே பேசினீர்கள். நீதியரசர் சந்துரு அவர்களுடைய தலைமையில் one man commission அமைத்து அதற்கான பரிந்துரையும் இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய பரிந்துரைப்படி அதற்கான ஒரு முடிவும் எடுக்கப்படும். POCSO விழிப்புணர்வு-இன்றைக்கு பல இடங்களில் POCSO குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். இங்கே உரையாற்றியிருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 1098 ஒவ்வொரு புத்தத்திலும் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஒவ்வொரு புத்தத்திலும் இருக்கின்றது. 1098 மட்டுமல்ல; 14417 என்கிற அந்த எண்ணும் ஒவ்வொரு புக்கத்திலும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். கடினமான பாடங்களுக்கென்று தனியாக video பதிவோடு easy ஆக அது புரியும்வண்ணம் இருக்க வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே மணற்கேணி என்ற ஒரு செயலியை நாம் உருவாக்கியிருக்கிறோம். கிட்டத்தட்ட 8 இலட்சத்து 96 ஆயிரம் பேர் மணற்கேணி செயலியை download செய்திருக்கிறார்கள்.

தேர்வு மையங்கள்!

தேர்வு மையங்களைப் பொறுத்தவரை, நேற்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் செங்கோட்டையன் அவர்கள் கேட்ட போது, கிட்டத்தட்ட 50+70 முறையே பத்தாம் வகுப்பும், 12 ஆம் வகுப்பும் என 120 மையங்கள் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று தெரிவித்தேன். அதுபற்றி நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து, ‘ஒரு வருடத்திற்கு மட்டும் சொல்ல வேண்டாம், தொடர்ந்து இந்த 2021-லிருந்து எவ்வளவு தேர்வு மையங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லுங்கள்’ என்று சொன்னார். ஆக, அந்த வகையில் பத்தாம் வகுப்புக்கென்று 410 தேர்வு மையங்களும், 12 ஆம் வகுப்புக்கென்று 415 புது தேர்வு மையங்களும் உருவாக்கியிருக்கிறோம்.

தனியார் பள்ளிகளில் கட்டணத்திற்காக தனியாக ஒரு Committee அமைத்திருக்கிறோம். ஏற்கெனவே 2009 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்திலே தனியார் பள்ளிகளின் கட்டணத்தை வரன்முறைப்படுத்துவதற்காக ஒரு Fee Committee அமைக்கப்பட்டு, அது தற்போது முன்னாள் நீதியரசர் திரு. பாலசுப்பிரமணியன் தலைமையில் இருக்கிறது. Committee நிர்ணயம் செய்யும் கட்டணத்தைத்தாண்டி யாரும் அதிகமாக வசூல் செய்யக் கூடாது என்ற விதிமுறையும் இருக்கின்றது.

அதேபோன்று, இங்கே நேற்றைய தினம் பேசிய உறுப்பினர் சின்னதுரை அவர்கள், laptop மற்றும் tablet எப்போது கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டார். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2 இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அதோடு கொடுப்பதையே நிறுத்திவிட்டார்கள். அதற்குப்பிறகு கொரோனா காலம் என்று பல்வேறு விதத்தில் அதற்கான பிரச்சினைகள் வந்தாலும் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலும்--நீங்கள் laptop என்ற ஒரு கருவி சார்ந்து பேசுகிறீர்கள். ஆனால், அந்தக் கருவியின் மூலமாக வழங்கப்பட வேண்டிய அறிவைப் பற்றி நாங்கள் பேசுகிறோம். எந்தவிதத்திலும் நம்முடைய மாணவர்களுக்கு other countries உடன் compete செய்யும் அளவிற்கு கிட்டத்தட்ட 8,209 hi-tech lab கட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்பு High Schools and Higher Secondary Schools-ல் மட்டும்தான் இருந்தது. இன்றைக்கு Middle Schools-யிலும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாணவர்களும் பயன்படுகின்ற வகையில் 8,209 hi-tech labs-ஐ (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 519 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொண்டு வந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, இந்த technology எப்படி கொண்டு செல்கிறோம் என்றால் 22,931 பள்ளிகளில் ஏறத்தாழ 415 கோடி ரூபாய் மதிப்பீட்டில் Smart Boards அனைத்து பள்ளிகளிலும் கொண்டு வந்துவிட்டோம். Laptop என்று வரும்போது, கிட்டத்தட்ட 8.5 இலட்சம் மாணவர்கள் பயன்படுவதைப் பற்றி நீங்கள் சொல்கிறீர்கள். இந்த technology கிட்டத்தட்ட 45 இலட்சம் மாணவர்கள் பயன்படும் வகையில் இன்றைக்கு நாங்கள் அதைக் கொண்டுவந்துவிட்டோம். இருந்தாலும், laptop என்று சொல்லும்போது, பொருளாதாரரீதியாகவும் இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதுசார்ந்து அந்தத் தயாரிப்பு நிறுவனங்களுடன் சேர்ந்து முடிவு எடுப்பார் என்று சொன்னாலும், எந்தவிதத்திலும் மாணவர்களுக்கு technology பற்றிய அறிவு கிடைக்காமல் போய்விடக் கூடாது என்பதில் நாங்கள் மிகவும் உன்னிப்பாக இருந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

PET teachers நிறைய பேர் நியமிக்க வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் கிட்டத்தட்ட 250 மாணவர்களுக்கு ஒருவரா அல்லது 500 மாணவர்களுக்கு ஒருவரா என்கின்ற விதத்தில் இன்றைக்கு நாங்கள் அதையும் கலந்தாய்வு செய்து கொண்டிருக்கிறோம். அது முடிந்தபிறகு நீங்கள் கேட்டவாறு கண்டிப்பாக PET teachers நியமிக்கப்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகிழ் முற்றம் திட்டம்!

மாணவர் சட்டப்பேரவை என்பது வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். ஏற்கெனவே மகிழ் முற்றம் என்ற திட்டத்தின் மூலமாக இதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும் private பள்ளிகளில்தான் ‘House’ concept வைத்திருப்பார்கள். தற்போது அரசுப் பள்ளிகளிலும் இந்த ‘House’ concept கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தவாறு ஏற்கெனவே கடந்த ஆண்டே மாணவர் சட்டப் பேரவை தொடங்கியிருக்கிறோம்.

தரமுயர்த்துதலைப் பற்றி நிறைய உறுப்பினர்கள் கேள்வி கேட்டிருக்கின்றீர்கள். கண்டிப்பாக அது அறிவிப்பிலே வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் தொலைக்காட்சியைப் பற்றி அண்ணன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். கல்வித் தொலைக்காட்சியை இன்னும் சீரும் சிறப்புமாகக் கொண்டு சென்று கொண்டிருக்கிறோம். அதனால்தான் இன்றைக்கு 1 கோடியே 23 இலட்சம் மாணவர்கள் பயன்படுகின்ற அளவிற்கு அதில் இருக்கிற video content நாங்கள் கொண்டு போய் சேர்க்கிறோம். private school-ஐச் சார்ந்த மாணவர்களும் அதைப் பயன்படுத்துகின்ற அளவிற்கு நாங்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறோம். அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை குறைவாக இருக்கிறது என்று அண்ணன் அவர்கள் தெரிவித்தார்கள். இயல்பான ஒரு சமூகம் இருக்கும்போதும், கொரோனா போன்ற பேரிடர் வந்ததற்குப் பிறகு ஒரு சமூகம் இருப்பதற்கும் நிறைய பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன.

ஆக, அந்த விதத்தில் நீங்கள் 2019-2020 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 68 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்கள் அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் இருந்தார்கள். இன்றைக்கு அது கிட்டத்தட்ட 69 இலட்சத்து 57 ஆயிரம் ஆக, அதாவது ஏறத்தாழ 1 இலட்சத்து 18 ஆயிரம் மாணவர்கள் கூடுதலாக வந்திருக்கிறார்கள்.

அரசுப் பள்ளிகளில் சேர்கிறார்கள்!

2021 ஆம் ஆண்டு அதிகமானதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். graph-ஐப் பார்த்தால் பொருளாதாரரீதியாகவும் எல்லாவிதத்திலும் ஏறிதான் இறங்கிருக்கும். ஏனெனில் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்போது ஒட்டுமொத்தமாக அனைவரும் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். பின்னர் வாழ்வாதாரம் சீரடையும்போது எப்படியாவது கடனை வாங்கி தனியார் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். அது அவர்களுடைய விருப்பம். இது ஜனநாயக நாடு. எந்தப் பள்ளியில் வேண்டுமானாலும் பிள்ளைகளைச் சேர்க்கலாம். ஆனால், எங்களைப் பொறுத்தவரை மாணவர்கள் படிக்க வேண்டும்.

Education system-ஐ விட்டு குழந்தைகள் வெளியில் சென்றுவிடக்கூடாது என்ற விதத்தில், இன்றைக்கு அந்தப் பிள்ளைகளையும் நாங்கள் எங்கள் பிள்ளைகளாகப் பார்த்து, அதனைச் செய்து கொண்டிருக்கின்றோம். அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள் நல்ல கருத்தைச் சொன்னார்கள். Zhang et al ஆய்வில் smart phone மூலமாக குழந்தைகள் addiction ஆகிறார்கள், ஏறத்தாழ 54 சதவிகித பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. இது எங்கே துவங்கியது என்றால், கொரோனா காலத்திலிருந்துதான் துவங்கியது. எப்போது நாம் online, Zoom, Google Classroom app மூலமாக பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தோமோ, அப்போதிலிருந்தே இந்த addiction துவங்கிவிட்டது. எங்கிருந்து இந்த shift நடக்கிறது என்று பார்த்தால், 9 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவர்களிடமிருந்துதான் இந்த addiction துவங்குகிறது. எனவே, smart phone குறித்து அவர்கள் சொன்னதையும் கருத்தில்கொள்கிறோம்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அமைச்சர் PTR அவர்களுடன் பேசும்போது, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் social media-ஐப் பயன்படுத்துவதற்கு நிறைய தடைகள் விதிக்கப்பபட்டுள்ளது போல, நாமும் அவ்வாறு செய்ய முடியாதா என்று பேசினோம். எனினும், இது ஒரு மாநிலம் சார்ந்து எடுக்கக்கூடிய முடிவு அல்ல, ஒரு நாடு சார்ந்து எடுக்க வேண்டிய முடிவு என்றும் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நிறைய technologies-ஐ involve செய்ய வேண்டியுள்ளது. நிச்சயமாக அதனை நாங்கள் உற்றுநோக்குவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அரசாங்கத்தின் concern என்ன, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் concern என்ன என்பதைக் காட்ட வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கின்றது.

அதேபோல, Tamil Learning Act குறித்து பேசியிருக்கிறார்கள். நிச்சயமாக இது எல்லா பள்ளிகளிலும் வரவேண்டும் என்று உங்களுக்கே தெரியும். காகங்கள் அமர்கின்ற சிலைகளை நாம் பார்த்திருப்போம், மேகங்கள் அமர்கின்ற அளவிற்கு, மிகப்பெரிய அளவில், 133 அடி உயரத்தில் வள்ளுவனுக்கு சிலை அமைத்துத் தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். வள்ளுவனை உயர்த்திப் பிடிக்கிறோம் என்று சொன்னால், தமிழையும் நாங்கள் உயர்த்திப் பிடிக்கிறோம் என்பதற்காக இதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கே தெரியும், Tamil Learning Act தொடர்பாக, கடந்த ஆண்டுகளில் தனியார் பள்ளிகள் நிறைய வழக்குகளுக்கெல்லாம் சென்றார்கள். இப்போது, அதையெல்லாம் மீறி, 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து 1 ஆம் வகுப்பில் கண்டிப்பாக தமிழ்ப் பாடம் இருக்க வேண்டும் என்றும், 2016-2017 ஆம் ஆண்டில் 1 மற்றும் 2 ஆம் வகுப்புகளில் கண்டிப்பாக தமிழ்ப் பாடம் இருக்க வேண்டும் என்றும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு, இன்றைக்கு 2025 ஆம் ஆண்டில், 10 ஆம் வகுப்பு வரை கண்டிப்பாக தமிழ் என்பதைத் தவிர்த்துவிட்டு, யாரும் படித்துவிட்டுவர முடியாது என்கிற அளவுக்கு அந்த சட்டத்தையும் நாங்கள் impose செய்திருக்கிறோம்.

வெளிநாடுகளுக்கு மாணவர்களின் கல்விச் சுற்றுலா!

6 புதிய மாவட்டங்களுக்கு புதிய தேர்வு அலுவலகம்!

அதேபோன்று, 6 புதிய மாவட்டங்களுக்கு புதிய தேர்வு அலுவலகம் கண்டிப்பாக வேண்டும். அது உண்மைதான். நிச்சயமாக புதிதாகத் துவங்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கும் மிக விரைவில் இந்த ஆண்டே அதைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அறந்தாங்கி திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, மாற்றுத் திறனாளிகள் சார்ந்திருக்கின்ற, disorders சார்ந்திருக்கின்ற மாணவர்கள்மீது அதிகப்படியான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இது குறித்து நேற்றே நான் சொன்னேன். நலம் நாடி என்ற ஒரு செயலி மூலமாக 21 வகையான disorders-ஐக் கண்டுபிடித்து, அந்த மாணவர்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கிறோம். எனவே, ஒட்டுமொத்தமாக மாற்றுத் திறனாளிகள் என்று வரும்போது, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தி லிருந்தே நான் சொல்கிறேன், இன்றைக்கு Sustainable Development Goals மூலமாக, 76.64 சதவிகிதம் என்று enrolment இருந்த நிலையில், இன்றைக்கு 85.19 சதவிகித மாணவர்களுக்கு கல்வியைத் தருகிற அளவிற்கு அது உயர்ந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நூலகங்கள் தரமுயரத்தப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றீர்கள். நூலகம் சார்ந்து பல அறிவிப்புகளை இன்று நீங்கள் அறிவிப்புகளில் பார்ப்பீர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

என்கின்ற வள்ளுவனின் வாக்கிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய விளக்க உரை என்பது, ஒரு தலைமுறையில் பெறுகின்ற கல்வி அறிவானது ஏழேழு தலைமுறைகளுக்கும் பாதுகாப்பாக அமையும் என்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விளக்க உரையோடு, கல்வியால் மக்களுக்கு சுயமரியாதையும், பாதுகாப்பும் அமைந்திட வேண்டுமென்று சொன்ன தந்தை பெரியார் அவர்களையும், போட்டியும் பொறாமையும் பொய் சிரிப்பும் இருக்கின்ற இந்த உலகில், நாம் நமது பாதையில் நேர்மையாக நடை போடுவதற்குத் துணையாக வருவது கல்வி மட்டுமே என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களையும் நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கேட்காமலேயே திட்டங்களை நிறைவேற்றிய கலைஞர்!

வள்ளுவர் கோட்டம் கட்ட வேண்டும், வள்ளுவனுக்கு சிலை எடுக்க வேண்டும் என்று எந்தத் தமிழறிஞர்களும் கோரிக்கை வைக்கவில்லை. கணினி என்பது முழுமையாக அனைவருக்கும் சென்று சேருவதற்கு முன்பாக இன்றைக்கு ஒரு TIDEL Park வேண்டுமென்று எந்த மாணவ சமுதாயமும் கொடி பிடிக்கவில்லை. நம்முடைய பிள்ளைகளும் இலவசமாக பேருந்தில் பயணம் செய்து, பள்ளிக்கூடம் சென்று பாடம் படிப்பார்கள் என்று எந்தப் பெற்றோரும் நினைத்துப் பார்க்கவில்லை. ஒட்டுமொத்தமாக நுழைவுத் தேர்வு என்பதே இரத்து செய்யப்பட்டு, தங்கள் பிள்ளைகளும் மருத்துவர்கள் ஆவார்கள் என்று எந்த கிராமப்புறத்தைச் சார்ந்த பெற்றோரும் நினைத்துப் பார்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி என்பது மேம்படுத்தப்பட்டு, தங்கள் பிள்ளைகளும் அமெரிக்க நாடு வரை சென்று கைநிறைய சம்பாதிப்பார்கள் என்று எந்த கிராமப்புறப் பகுதியைச் சார்ந்த ஏழைப் பெற்றோரும் நினைத்துப் பார்க்கவில்லை. சென்னை என்பது automobile-ன் நகரமாக மாற வேண்டும் என்று எந்தப் பொருளாதார நிபுணர்களும் சொல்லவில்லை.

புதிதுபுதிதாக தொழில்நுட்ப கண்டுபிடிப்பு என்பது தமிழ்நாட்டில்தான் கண்டுபிடிக்கபட வேண்டும் என்று, எந்தப் பொறியாளர்களும் சொல்லவில்லை. ஆனால், இவை அனைத்தும் நடந்தது. அதற்கு காரணம் ஒருவர். அவர்தான் அஞ்சுகம் தாய் பெற்றெடுத்த 5 அடி சிங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) கடவுளுக்குக் கொடுத்து பக்தனாக இருப்பதைக் காட்டிலும், ஏழைக்குக் கொடுத்து கடவுளாக இருந்து விட்டுப்போகலாம் என்று சொன்னவர் அந்த மனிதர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பனை செய்தால் யார் வேண்டுமானலும் hero ஆகலாம், கற்பனைச் செய்தால்கூட எங்களுடைய கலைஞர் ஆக முடியாது. அந்த கலைஞர் உறங்குகின்ற திசையை நோக்கி என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சங்ககால இலக்கியங்களில் பதினெண்கீழ்க் கணக்கில், விளம்பி நாகனார் என்கின்ற புலவர் எழுதிய நான்மணிக்கடிகையில் ஒரு பாடல்,

“ஏரி சிறிதாயின் நீர் ஊறும்;
இல்லத்து வாரி சிறிதாயின் பெண் ஊரும்;
மேலைத் தவம் சிறிதாயின் வினை ஊரும்;
உரன் சிறிதாயின் பகை”

இந்தப் பாடலுடைய விளக்கம் என்பது, ஏரி சிறிதாக இருந்தால் நீர் வடிந்து சென்று விடும், வீட்டில் வருமானம் குறைவாக இருந்தால், மனையாள் வரம்பு கடந்து பேசுவார், முன்பு செய்த தவம் சிறிதாக இருந்தது என்று சொன்னால் வினை உறுத்தும். வீரம் குறைவாக இருந்தது என்று சொன்னால், பகைவர் வென்றுவிடுவர். ஆம், தமிழ்நாட்டில் வலிமைக் குறைந்தவர்களெல்லாம் ஆட்சி செய்தபொழுது, ஆதிக்க சக்தியும், அதிகாரமும் நம்முடைய மாநிலத்தின்மீது பாய்ந்து நம்முடைய உரிமைகளையெல்லாம் பறிக்கின்ற அந்தச் செயலை நாம் பார்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு இந்தத் தமிழ் நாட்டை, ஒரு அரசன் ஆளவில்லை, ஒரு வீரன் ஆளுகிறார். அந்த வீரனுடைய வீரத்தையும், எங்களுடைய கல்வி சார்ந்திருக்கின்ற கருபொருளாக இருக்கின்ற அறிவாயுதத்தையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வரிகளாக சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

“வீரம் விலை போகாது,
விவேகம் துணைக்கு வராவிட்டால்!
தீட்டிய வாளும் தினவெடுத்த தோள்களிலே
தூக்கிய ஈட்டி மட்டும் போதாது வீரர்களே!
இதோ நான் தரும் அறிவாயுதத்தை
ஏந்திக் கொள்ளுங்கள்!”

அறிவாயுதம், அறிவாயுதம் என்று சொன்னார்கள் எங்களுடைய கலைஞர் அவர்கள். அவர்களுடைய வரியாக, ஒட்டுமொத்தத் தமிழ் சமுதாயத்தையும், இன்றைக்கு அறிவு சார்ந்த சமுதாயமாக மாற்றிக்கொண்டிருக்கின்றார். வீரனுக்கு வீரனாக, அரணுக்கு அரணாக, அரசனுக்கு அரசனாக என்னுடைய அரசியல் ஆசானாக இருக்கின்ற தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இளையதலைமுறையின் ஈர்ப்பு சக்தி!

சமீபத்தில் நம்முடைய உரிமை பிரச்சினையாக இருக்கின்ற தொகுதி மறுசீரமைப்பு விஷயம் வந்தபொழுது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுடைய அழைப்பை ஏற்று ஒட்டுமொத்தமாக இந்தியாவிலிருந்து இருபதுக்கும் மேற்பட்ட ஆளுமைகள், முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு இயக்கத்தினுடைய தலைவர்கள் எல்லோரும் கலந்துகொண்ட ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட தலைவர்கள் எல்லோரும் தங்களுடைய புருவத்தை உயர்த்திப் பார்க்கின்ற அளவுக்கு, அதனுடைய பாதகங்களை எடுத்துவைத்தார் ஓர் இளைஞன். இன்றைய இளைய தலைமுறையின் ஓர் ஈர்ப்பு சக்தி. ஒரு கல்லை எடுத்தார்; இவ்வளவு பேர் சட்டமன்றத்திற்கு வந்துவிட்டோம். ஒரு சொல்லை எடுத்தார்; நாற்பது பேரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைத்திருக்கிறோம் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட எங்களது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உனக்கு முன்னே செல்லும் தலைவனாக அல்ல; உன்னை முன்னால் தள்ளி பின்னால் வரக்கூடிய கோழையாகவும் நான் இருக்க மாட்டேன்; உன் தோளோடு தோள் நின்று உன் உற்றத் தோழனாக என்றும் உங்களில் ஒருவனாக வலம் வருவேன் என்று சொன்னது எங்கள் தலைவருடைய வார்த்தை. அந்த வார்த்தையை உறுதிப்படுத்துகின்ற அளவுக்கு இன்றைக்கு உறுதியான உழைப்பை செலுத்திக்கொண்டிருக்கின்ற எங்களுடைய அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், குறிப்பாக அவையினுடைய முன்னவர், எங்கள் மாவட்டத்தின் அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையை ஒரு பேரவையாகப் பார்க்கும்போது, பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சராக நான் இதை ஒரு வகுப்பறையாக பார்க்கின்றேன். ஆம். உங்களுடைய அனுமதியோடு யார், யாரெல்லாம் எழுந்து நின்று பேசுகிறார்களோ அவர்களெல்லாம் ஆசிரியர்களாக மாறிப்போகிறார்கள். அமர்ந்து கேட்கக்கூடிய ஒவ்வொருவரும் மாணவர்களாக மாறிப் போகிறார்கள். அப்படி அந்த ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராக இருக்கின்ற எங்களுடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், அனைத்து சட்ட மன்ற கட்சிகளின் தலைவர்கள் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும், எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்கும், இந்த அரங்கத்தில் இருக்கின்ற அனைவருக்கும் என்னுடைய வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பேரவையை ஒரு வகுப்பறை என்று சொல்லும்போது லெனின் அவர்களுடைய ஒரு கூற்று எனக்கு நினைவிற்கு வருகிறது. அனைவரையும் நேசி, ஒருசிலரை மட்டும் நம்பு, ஒருவரை மட்டும் பின்பற்று, ஆனால், ஒவ்வொருவரிடமுமிருந்து கற்றுக்கொள் என்று சொன்னார். இந்த அரங்கத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரிடமுமிருந்தும் ஏதோ ஒரு விஷயத்தைக் கற்றுக்கொண்ட மாணவனாகத்தான் என்னை நான் கருதுகின்றேன்.

ஐந்தாவது முறையாக பேசுகின்ற வாய்ப்பு எனக்குத் கிடைத்திருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் இருவர். ஒருவர், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்பை வழங்கிய எங்கள் கழகத்தின் தலைவர். இரண்டாவது, என்னுடைய மிகப்பெரிய குடும்பமாக இருக்கின்ற திருவெறும்பூர் தொகுதி மக்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகளை அவர்களுடைய பொற்பாதங்களில் நான் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஐந்தாவது முறையாக பேசுகின்ற வாய்ப்புக்கு முன்பாக ஏதேதோ காரணங்களால் எங்களுடைய மாணவச் செல்வங்களோ, அவர்களுடைய பெற்றோர்களோ, எங்களுடைய பெருமதிப்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களோ மறைந்துபோயிருக்கலாம். அவர்கள் ஒவ்வொருவரையும் என்னுடைய இதயத்தில் நான் ஏந்தி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மீனவ சமுதாய மக்களின் சார்பாக நன்றி!

முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி ஒரு நேர்த்தியான நிதிநிலை அறிக்கை, வளர்ச்சிக்கான வேளாண் நிதிநிலை அறிக்கை ஆகியவற்றை வழங்கியிருக்கின்ற இரண்டு அமைச்சர்களுக்கும் எங்களுடைய திருச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் மக்களின் சார்பாகவும், மக்கள் பிரதிநிதிகளின் சார்பாகவும் என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, நாகப்பட்டினம் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் என்ற முறையில் ஏப்ரல் 15 என்பது எங்களுடைய பத்தாம் வகுப்பு மாணவர்களுடைய தேர்வு நிறைவடைந்த நாள் என்று எடுத்துக்கொண்டாலும், அன்றைக்குதான் மீன்பிடி தடை காலம் தொடங்கிய நாள். இதுநாள் வரைக்கும் எங்களுடைய மீனவ சமுதாய மக்களுக்கு நிவாரணமாக ரூ.5,000/- வழங்கிய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு முதல் ரூ.8,000/- ஆக உயர்த்தித் தந்திருக்கின்ற அவர்களுக்கு, அந்த மீனவ சமுதாய மக்களின் சார்பாக என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிள்ளைகளுக்காக சீர் கொண்டு வந்த முதலமைச்சர்!

மானிய கோரிக்கையில், கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஏறத்தாழ பள்ளிக் கல்வித் துறைக்கென்று ஒதுக்கப்பட்ட நிதி, 10 ஆண்டுகளில் ரூ.2 இலட்சத்து 24 ஆயிரம் கோடி, நமக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 46 ஆயிரத்து 767 கோடியையும் சேர்த்து, ஏறத்தாழ ரூ.2 இலட்சத்து 603.43 கோடியை தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள், அதற்கு என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். Files என்று வரும்பொழுது, ஏறத்தாழ 3,069 எனக்கு வத்திருக்கிறது. இதுவரைக்கும், 3,065 files-க்கு நான் ஒப்புதல் கொடுத்திருக்கின்றேன். இன்னும், 4 நிலுவையில் இருக்கின்றது. Announcements என்று வரும்பொழுது, ஏறத்தாழ எல்லாவிதமான announcement-யும் பார்த்தீர்களேயென்றால், 168 announcements வந்திருக்கிறது. அதில் 114-ஐ நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். 54 ongoing process இவையெல்லாம் நடைமுறையில் இருக்கக்கூடிய announcement ஆக இருக்கிறது. இன்றைக்கு அதையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். Manifesto தேர்தல் வாக்குறுதி என்று வரும்பொழுது ஏறத்தாழ 32 வகையான பள்ளிக் கல்வித் துறை சார்ந்திருக்கின்ற வாக்குறுதிகளை 24-ஐ நாங்கள் நிறைவேற்றி யிருக்கிறோம்.

4 வாக்குறுதிகளுக்கு, அதற்குத் தகுந்தாற்போல் தனியாக குழுக்கள் அமைக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2 வாக்குறுதிகள் நடைமுறைப்படுத் தப்பட வேண்டும். இவ்வாறாக ஒவ்வொருவிதத்தில் சொல்லும்போது, வெட்டுத் தீர்மான ங்களைப் பொறுத்தவரையில், 214 வெட்டுத் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றை வகைவாரியாக பிரித்தால், 52 வகையான வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்து, இத்தனை திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திட்டங்களையெல்லாம் சேர்த்து, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மாணவனுடைய மடலாக எப்படிச் சொல்லலாம் என்றால்,

மாணவரின் மனசு!

2021 ஆம் ஆண்டு கொரோனா பாதிப்பை உணர்ந்து, பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு, மன நலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகளோடு எண்ணும் எழுத்துமாய், வாசிப்பு இயக்கமாய், எங்கள் இல்லம் தேடி வந்தது கல்வி. நம்ம ஸ்கூல், நம்ம ஊர் பள்ளி சென்று முதலமைச்சர் காலை உணவு அருந்தி, எங்களுடைய அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ள வானவில் மன்றங்களும், மணற்கேணி செயல்களும், ஆங்கிலவழி ஆய்வகங்களும், புதிது புதிதாக நூலகங்களும் நாங்கள் பெற்றோம். கூடி மகிழ்ந்திட, மலர்ச்சி பொங்கிட கோடைக் கொண்டாட்டங்களும், திறமையைக் காட்ட கலைத் திருவிழாக்களும், வெளிநாடு கல்விச் சுற்றுலா வரைக்கும் சென்று, ‘கற்றது கைம் மண் அளவு, கல்லாதது உலக அளவு’ என்று அறிந்தோம். மேலும் எங்களை ஊக்கப்படுத்துவதற்காக பள்ளி ஆண்டு விழாக்கள், தகைசால் பள்ளிகள், மாதிரிப் பள்ளிகள், சிறார் திரைப்படங்கள், செஸ் ஒலிம்பியாட், சாரணர், சாரணியர் இயக்கம், நம் நாட்டு, வெளிநாட்டைச் சார்ந்திருக்கின்றவர்களையும் அழைத்து புத்தகத் திருவிழாக்கள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், திறனறி வகுப்பறைகள், பல திறனறித் தேர்வுகள், ஒரு சிலருக்கு மட்டுமே ஐ.ஐ.டி என்பதை மாற்றி, அனைவருக்கு ஐ.ஐ.டி. போன்ற திட்டங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பாரதியார் பெயரில், அண்ணா பெயரில், பேராசிரியர் பெயரில் என ஒவ்வொருவர்களுடைய பெயர்களிலும் விருதுகளை வழங்குவதற்கு எங்களுடைய மாணவச் செல்வங்கள் ஆசிரியர் பெருமக்களிடம் பயிற்சிகளைப் பெற்றார்கள். எங்களில் ஒருவராக இருக்கக்கூடிய மாற்றுத் திறனாளி மாணவருக்கு வீடு தேடி கல்வியும், இயன்முறை மருத்துவமும் சென்று சேர்ந்தது. இந்த திராவிட மாடல் ஆட்சியில் பெற்றோம் பலவழி கல்வித் திட்டத்தை! கற்றோம் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் மதித்துக் கொண்டாட!

தமிழ்நாட்டினுடைய அரசுப் பள்ளி மாணவர்களாய், நான் முதல்வன், நாங்கள் புதுமைப் பெண்கள், நாங்கள் தமிழ்ப் புதல்வன்கள் என்று என்றும் நாங்கள் கர்வம் கொள்வோம். இனி எங்கள் பள்ளிகள் வறுமையின் அடையாளம் அல்ல; எங்கள் பெருமையின் அடையாளம்! (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிக்கு,

மாணவ சமுதாயம்.

என்று சொல்கின்ற அளவிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும்ஒலி)

குறிப்பாக, இந்த நான் முதல்வன் திட்டத்தைப் பற்றிச் சொல்கின்றபோது, முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பிறந்த நாள் அன்று இந்த நான் முதல்வன் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, அந்த அரங்கத்தில் நான் அமர்ந்திருந்தேன். அவர் ஆற்றிய உரையை நான் கேட்டேன். அவர் ஆற்றிய உரையை நிறைவாக முடிவு செய்யும்போது, அவர், “சில திட்டங்கள் சில வாரங்கள் பயன்படும்; சில திட்டங்கள் சில மாதங்கள் பயன்படும்; சில திட்டங்கள் சில ஆண்டுகள் பயன்படும்; ஆனால், இந்த நான் முதல்வன் திட்டம் மட்டும் தலைமுறை தலைமுறையாய் பயன்படும்” என்று சொல்லிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அவர், “கால் நூற்றாண்டு கடந்து, அரை நூற்றாண்டு கடந்து, மு.க. ஸ்டாலின் என்கின்ற முதலமைச்சர் கொண்டு வந்த நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக நான் பயன் பெற்றேன் என்று யாராவது ஒருவர் சொன்னாலே போதும், (மேசையைத் தட்டும் ஒலி) அதுவே எனக்குப் பெருமை” என்று கூறி அவர் உரையை செய்திருந்தார்.

யு.பி.எஸ்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்ற சங்கர பாண்டியராஜ்!

இந்த நான் முதல்வன் திட்டத்தைப் பற்றிக் கூறுகின்றபோது, எங்களுடைய பள்ளிக் கல்வித் துறை சார்பாக எனக்கான மிகப்பெரிய ஒரு பெருமை என்னவெனில், எங்களுடைய ஒரு துறையில் ஒரு Assistant ஆக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தம்பி சங்கர பாண்டியராஜ் என்கின்ற மாணவர் தற்போது UPSC தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கின்றார். நேற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து வாழ்த்துக்களையும் பெற்றிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாணவனுடைய பெற்றோர்கள் தையல் கலைஞர்கள். மாதம் 10,000 ரூபாய் வருமானம் பெறக்கூடிய தையல் கலைஞர்களுடைய பிள்ளை UPSC தேர்வில் தேர்ச்சி செய்திருக்கிறார் என்றால், நாங்கள் எதற்காக NEP வேண்டாம் என்று சொல்கிறோம் என்பது தெரிகிறதா (மேசையைத் தட்டும் ஒலி)

முதல்வருக்கு எழுதிய பெரியவரின் கடிதம்!

உங்கள் அனுமதியோடு இந்த சிறிய காகிதத்தை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன். அமைச்சர் முத்துசாமி அவர்கள் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் பேச வந்தபோது, கூட்டத்திலிருந்து ஒரு பெரியவர் எனக்கு எழுதிக் கொடுத்தது அது. அன்றையதினம், அதை வாங்கி பாக்கெட்டில் வைத்துவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டேன். அதைப் பார்க்கவில்லை. நான் போகும்போது, அந்தக் காகிதத்தில் எழுதியிருந்தது என்னவென்று பார்த்தேன். அதில், என்னுடைய தொகுதியைச் சார்ந்த ஒரு பெரியவர், “என்னுடைய பேரப்பிள்ளைகள் இரண்டு பேர் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பயன்பெற்றிருக்கிறார்கள். மு.க. ஸ்டாலினுக்கு நன்றி சொல்லி பேசுங்கள்” என்று எழுதியிருந்தார்.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்